## .மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
## அசல் வழக்கு எண்.131/2019

PW3–ரமேஷ், த/பெ. ராமமூர்த்தி
நாள்–16.04.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

நான் எந்த வருடம் சென்னைக்கு குடி பெயர்ந்தேன் என்றால் 1994–ம் வருடமாகும். தாவா சொத்து திருவெண்காடு கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண். தெரியாது என்றால் புல எண்.131 என்று நினைக்கிறேன். தாவா சொத்தின் புல எண் 131 என்ற எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் என்னுடைய பழைய ஆவணத்தை கொண்டு தெரிந்துகொண்டேன். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் விமலா பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் தட்சிணாமூர்த்தி மற்று அவர் மகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து வாதிகளுக்கு எப்படி கிடைத்தது என்றால் ராஜமணிசாஸ்திரி வகையாறாவிடம் கிடைக்க பெற்ற சொத்தாகும். தாவா சொத்தை வாதிகளுக்கு கிரயம் மூலம் பாத்தியம் என்றால் சரிதான்.

தாவா சொத்து என்பது என்னவெண்றால் வீடு மற்றும் மனையை சேர்ந்தது ஆகும். தாவா சொத்திற்காக கிரய பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். கிரயம் எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. தாவா சொத்தின் நான்கெல்லைகள் கீழ சன்னதிக்கு வடக்கு, வாதி மனைக்கு கிழக்கு, ஸ்ரீஅம்மன் சன்னத்திக்கு தெற்கு, பிரதிவாதியின் புல எண்ணின் உள்ள மாடி வீட்டு மற்றும் மனைக்கு மேற்கு இதற்குட்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது தாவா சொத்திற்கானது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை–5)

நான் கொடுத்த சமயத்தில் இருந்தவாறு தற்சமயம் புகைப்படத்தில் இல்லை. தாவா சொத்தில்தான் பிரதிவாதிகள் சுமார் 10 ஆண்டுகளாக போர்வெல் அமைந்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சொல்லி எனக்கு தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தின் தாவா சொத்தின் நீள அகலம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இறப்பு காரியத்திற்கு சென்றபிறகு தாவா சொத்தில் உள்ள சந்து வழியாகதான் பிரதிவாதிகளும் அதற்கு முன்பு எங்கள் குடும்பத்தாரும் கொல்லை புறத்திற்கு சென்றோம் என்றால் சரியல்ல.

நாங்கள் தாவா சொத்தை பிரதிவாதிகளுககு விற்கும்போதே மாடி வீடு இருந்தது என்றால் ஒரு பகுதி மாடிவிடாகவும், ஒரு பகுதி சீமை ஓட்டு வீடாகவும் மற்றொரு பகுதி நாட்டு ஓட்டு வீடாகவும் இருந்தது. ஏற்கனவே இருந்த ஓட்டு வீட்டை இடித்துவிட்டுதான் பிரதிவாதிகள் மாடி வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த தாய் சுவற்றை இனைத்துதான் புதிய வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் பில்லர் போட்டு கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த தாய் சுவரும் புதியதாக கட்டப்பட்ட மாடி வீட்டின் சுவரும் ஒரே அளவில்தான் உள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் வலுக்கட்டாயமாக அனுபவித்து வருகிறார்கள். நாங்கள் இருந்தபோது தாவா சொத்தை அனுபவிக்கவில்லை. வழக்கிற்காக முதல் விசாரணையில் இல்லாத சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்க்கும்போது எனக்கான பங்கை நான் கேட்டும் எனது தகப்பனார் கொடுக்கவில்லை என்பதால்தான் பிரதிவாதிகளுக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை எப்போது இறுதியாக நேரில் பார்வையிட்டேன் என்றால் சுமார் 1 ஆண்டு முன்பாகும். தாவா சொத்தை பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட புல எண்ணுடன் சேர்த்து

அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதி என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்கு மூலத்தில் தாவா சொத்தை சேர்த்துதான் வாதிகள் கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளது பொய் என்ற சொன்னால் சரியல்ல. நான் வாதிகளுக்கு கேட்டுக்கொண்டதிற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**